AL/2025/48/STE-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය I
கிரேக்க, உரோம நாகரிகம் I
**Greek and Roman Civilization I**

**48 STE I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

විභාග අංකය / சுட்டெண் / Index No ...............................

පරීක්ෂකගේ ප්‍රයෝජනය සඳහා පමණි.
பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்.
**For Examiner's use only.**

| ප්‍රශ්න අංක<br>வினா இல.<br>Question No. | ලකුණු<br>புள்ளிகள்<br>Marks |
|---|---|
| **01 - 30** | |
| **31 - 50** | |
| එකතුව<br>மொத்தம்<br>**Total** | |

| | අත්සන<br>கையொப்பம்<br>**Signature** | සංකේත අංකය<br>குறியீட்டு எண்<br>**Code Number** |
|---|---|---|
| පළමු පරීක්ෂක<br>முதலாவது பரீட்சகர்<br>First Examiner | | |
| දෙවන පරීක්ෂක<br>இரண்டாவது பரீட்சகர்<br>Second Examiner | | |
| අතිරේක / ප්‍රධාන පරීක්ෂක<br>மேலதிக / பிரதான பரீட்சகர்<br>Additional/Chief Examiner | | |
| ඇගයීම් ලකුණු තහවුරු කිරීමේ පරීක්ෂක<br>மதிப்பீட்டுப் புள்ளிகளை<br>உறுதிப்படுத்தும் பரிசோதகர்<br>Evaluation Marks Finalizer | | |
| ප්‍රධාන පරීක්ෂක<br>பிரதான பரீட்சகர்<br>Chief Examiner | | |

0606000188110760

[ 2 වැනි පිටුව බලන්න/பக். 2 ஐப் பார்க்க/See page two

000760

**(48) - கிரேக்க, உரோம நாகரிகம் I** *இரண்டு மணித்தியாலம்*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ பகுதி **I** இல் **1** தொடக்கம் **30** வரையான வினாக்களுக்குச் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை** எதிரேயுள்ள **அடைப்புக்குறியினுள்** எழுதுக.

※ பகுதி **II** இல் **31** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குரிய விடைகளை, தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

※ **எல்லா** வினாக்களுக்கும் ஏதேனும் **ஒரு மொழியில்** மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - கிரேக்க, உரோம வரலாறு

**1.** மெசீனியன் நாகரிகம் வளமாகக் காணப்பட்டது பின்வரும் எந்தக் காலப்பகுதியில் ஆகும்?
(1) கி. மு. 3000-2000 (2) கி. மு. 2000-1600 (3) கி. மு. 1600-1100
(4) கி. மு. 1100-800 (5) கி. மு. 800-500 (……)

**2.** கிரேக்க வீர காலத்தின் வரைவிலக்கணத்தை மிக நன்றாக விவரிக்கும் விடையினைத் தெரிவுசெய்க.
(1) வாழ்க்கையை விடவும் பரந்த வீரர்கள் மற்றும் அவர்களின் அசாதாரண செயற்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.
(2) தர்க்கம் மற்றும் காரணங்கள் மீது கவனம் செலுத்துதல்
(3) சிவில் கடமைகள் சனநாயகம் என்பவற்றில் கவனம் செலுத்துதல்
(4) அஹிம்சையையும் சமாதானத்தையும் விருத்தியாக்குதல்.
(5) ஏஜியன் நாகரிகத்தின் பரம்பல். (……)

**3.** ஸ்பார்டன் அரசியல் யாப்பின் குழு ஆட்சி (oligarchic) மற்றும் சனநாயகம் (democratic) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
(1) இரண்டு மன்னர்களோடு கெருசியா (Gerusia)
(2) இரண்டு மன்னர்களும் எபோர்ஸ் உம் (EPhors)
(3) கெருசியாவும் எபோர்ஸ் உம் (Gerusia and Ephors)
(4) மூத்தோர் கவுன்சிலும் அபெல்லாவும் (Apella)
(5) ஆகன்களும் (Archons), செனட்சபையும் (……)

**4.** லைகர்கஸ்ஸின் சட்டத் தொகுப்பின் விளைவு
(1) பொது உணவு மண்டபம் (syssitia) தடை செய்யப்பட்டமை
(2) செல்வம் மற்றும் ஆடம்பரம் ஊக்கமளிக்கப்பட்டமை
(3) ஸ்பார்டன்மார் பாரசீகர்களின் பகைவர்கள் ஆக்கப்பட்டமை
(4) ஸ்பார்டன்மார் தொழில்சார் படைவீரர்களாக்கப்பட்டமை
(5) ஸ்பார்டா வர்த்தக மையமாக உயர்த்தப்பட்டமை (……)

**5.** சொலோனின் செய்சக்தெய்யா (seisachtheia) சீர்திருத்தத்தை அறிமுகம் செய்வதற்கு ஏதுவாக அமைந்தது
(1) வறிய குடிமக்களை கடன் சுமையிலிருந்து விடுதலை பெறச்செய்தல்
(2) புதிய வர்த்தகப் பாதையைத் தாபித்தல்
(3) நிலங்களைச் சமமாக மீளப் பகிர்ந்தளித்தல்
(4) வலிமைமிக்க இராணுவத்தை கட்டியெழுப்புதல்
(5) மக்களுக்கு அதிகாரத்தை வழங்குதல் (……)

**6.** கிரேக்க சர்வாதிகார ஆட்சியின் விளைவை **குறிப்பிடாத** தெரிவு
(1) சமகால கிரேக்கத்தில் சிலர் ஆட்சி (oligarchic) மரபு வீழ்ச்சியடைதல்
(2) பிரபுக்களுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்தல்
(3) மக்களுக்கு திறந்துவிடப்பட்ட புதிய சமய விழாக்களை அறிமுகம் செய்தல்
(4) பொருளாதார அபிவிருத்தியை முன்னேற்றுதல்
(5) கலைகளும் இலக்கியமும் விருத்தியடைதல் (……)

020600000188110760

**7.** அதீனியன் சமூகத்தின் வளர்ச்சிக்கு கிளய்ஸ்தனீஸ்ஸின் பங்களிப்பு
(1) கவுன்சிலின்(Boule) அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரித்தல்
(2) குடிமக்களுக்கு தந்தைவழிப்பெயர் (Patronymic) கோட்பாட்டை அறிமுகம் செய்தல்
(3) அரசின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குப் பொதுமக்களுக்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியளித்தல்
(4) சமூக முன்னேற்றத்துக்காக மரபுவழி வம்சாவழி ஆதிக்கக்கட்டமைப்பை விருத்தி செய்தல்
(5) குடும்பம் வம்சம் என்பவற்றுக்குப் பதிலாக (demes) பிரதேச அடிப்படையில் கோத்திரங்களை மீள் ஒழுங்கமைப்புச் செய்தல் (……)

**8.** பெரிக்ளிஸினால் கட்டப்பட்ட அதீனா தேவதைக்கு மட்டும் அர்ப்பணிக்கப்பட்ட நினைவுத் தூபிகளுள் ஒன்று
(1) டெலொஸ் தேவாலயம் (2) பொறபிலேயா (3) பார்தெனொன்
(4) டெல்பி தேவாலயம் (5) சுனியோன் தேவாலயம் (……)

**9.** பாரசீகர்களிடமிருந்து கிரீஸை பாதுகாத்ததாக கருதப்படக்கூடிய கிரேக்க தளபதி
(1) அல்சிபியாடிஸ் (Alcibiades) (2) கிமொன் (Cimon) (3) நிகியாஸ் (Nicias)
(4) பெரிக்ளிஸ் (pericles) (5) தெமிஸ்டொக்விஸ் (Themistocles) (……)

**10.** நிரல் **1** இல் குறிப்பிடப்பட்டுள்ள போரின் பெயருக்குப் பொருத்தமான விவரிப்பினை உரிய ஒழுங்குமுறையில் நிரல் **2** இல் காட்டப்பட்டுள்ள தெரிவுகளிலிருந்து தெரிவுசெய்க.

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| மரதன் போர் (கி.மு 490) | A - கிரேக்க படையணி தெமிஸ்டொக்லிஸ் தலைமையின் கீழ் பாரசீக கடற்படைக்கு எதிராக நடாத்திய கடற்படைப் போர் ஆகும். |
| தர்மொபிலே யுத்தம் (கி.மு 480) | B - கிரேக்கர்களுக்கு தீர்மானமிக்க வெற்றியை வழங்கி பாரசீக ஆக்கிரமிப்பை முடிவடையச் செய்வதற்குக் காரணமான போசானியஸ்ஸின் கீழே கிரேக்கர்கள் நடத்திய இறுதியான தரைப்போர் ஆகும். |
| சலமிஸ் யுத்தம் (கி.மு 480) | C - கிரேக்க படைப்பாளி ஸ்பாட்டாவின் மன்னன் லியோனிடாஸ் தலைமையில் மிகப்பெரிய பாரசீகப் படையைப் பிடித்து வைத்திருந்த போர் ஆகும். |
| பலட்டியா போர் (கி.மு 479) | D - பாரசீகருக்கு எதிராக தீர்மானம்மிக்க அதீனியன் வெற்றி முடிவடைந்து மிலிடியாடிஸ்ஸின் கீழ் நடைபெற்ற பாரசீகர்களின் கிரேக்க ஆக்கிரமிப்பாகும். |
| மைகாலோ போர் (கி.மு 479) | E - அயோனியா கடற்கரையோரத்தில் பாரசீகப்படையணி அழிவடையக் காரணமான லெயோடிக்டாஸ் என்ற பெயருடைய ஸ்பார்ட்டன் மன்னனின் கீழ் நடைபெற்ற கடற்போர் ஆகும். |

(1) A, C, E, D, B (2) B, C, D, A, E (3) C, B, A, E, D (4) D, C, A, B, E (5) E, A, B, C, D
(……)

**11.** திறந்த மோதலுக்கும் பெலொபொனேசியான் போரின் ஆரம்பத்துக்கும் ஏதுவான உடனடிக் காரணம் யாது?
(1) அந்த சந்தர்ப்பத்தில் கொரிந்தியானின் உதவியை எதிர்பார்த்த அதென்ஸின் முன்னைய நட்புப் பங்காளியான பொட்டெய்யாவ அதென்ஸ் அரசினால் முற்றுகையிடப்பட்டமை
(2) ஸ்பார்டாவின் நட்புப்பங்காளியான தீப்ஸ் அதீனியாவின் நட்புப்பங்காளியான பிளேட்டியா அரசைத் தாக்கியமை
(3) ஸ்பார்டாவின் நட்புப் பங்காளியான மெகாராவுக்கு எதிராக அதென்ஸ் அரசு பொருளாதார தடை விதித்தமை
(4) ஸ்பார்டா மற்றும் அதன் நட்புப் பங்காளிகள் அதிகரிக்கும் அதீனியன் அதிகாரத்தை அச்சுறுத்தலாகக் கருதியமை
(5) வளரந்துவரும் சாம்ராச்சியத்துடன் அதென்ஸ் அரசு டீலியான கூட்டமைப்பினைக் கட்டுப்படுத்தியமை (……)

[11 වැනි පිටුව බලන්න/பக். 11 ஐப் பார்க்க/See page eleven

- பின்வரும் கூற்றுகளை வாசித்து **12, 13** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
  - A - சிசிலி வளங்கள் பல நிறைந்த செல்வந்த தீவாகக் கருதப்பட்டது
  - B - எகெஸ்ரா / செகெஸ்ரா அரச உதவியை கேட்டிருந்தமை
  - C - அது மேலைத்தேய மத்தியதரைக்குச் செல்வாக்குச் செலுத்துவதற்கும் ஆதிக்கத்தைப் பரப்புவதற்கும் வழியாகும் எனக் கருதப்பட்டமை
  - D - திறமைமிக்க தளபதியான அல்சிபியடிஸ் திரும்ப அழைக்கப்படுவதற்கு அரசியல் போட்டி காரணமாயிருந்தமை
  - E - பாதுகாப்பு உதவிகள் கிடைத்த போதும் சுற்றிவளைப்பு தொடர்ந்தும் இடம்பெற்றமை

**12.** சிசிலிக்கு எதிராக அதீனியன் ஆக்கிரமிப்புக்கான காரணத்தைக் குறிப்பிடும் மேலுள்ள இரண்டு கூற்றுகளும் எவை?
(1) A உம் B உம் (2) A உம் E உம் (3) B உம் C உம்
(4) C உம் D உம் (5) D உம் E உம் (......)

**13.** சிசிலி ஆக்கிரமிப்பின்போது அதீனியன் தோல்விக்கு பங்களிப்புச் செய்த காரணங்களைக் குறிப்பிடும் மேலுள்ள இரண்டு கூற்றுகளும் எவை?
(1) A உம் B உம் (2) A உம் E உம் (3) B உம் C உம்
(4) C உம் D உம் (5) D உம் E உம் (......)

**14.** அன்டல்சிடாஸ்கின் சமாதானம் பற்றி விளக்கமாக விவரிக்கும் கூற்று எது?
(1) கி.மு. 449 இல் கிரேக்க பாரசீக யுத்தத்தை முடிவுறுத்தி டிலியான் கூட்டமைப்புக்கும் மற்றும் ஆர்கமென்ட் பேரரசுக்கும் இடையிலான உடன்படிக்கை
(2) கி.மு. 387 இல் கொரிந்தியான் யுத்தம் முடிவுக்கு கொண்டுவந்தபின் கிரிஸில் அறிமுகஞ் செய்யப்பட்ட பொது சமாதானம்
(3) கி.மு. 421 இல் பெலொபொனேசியன் போரின் முதல் அரைப்பகுதியை முடிவுக்குக் கொண்டுவந்து தாபிக்கப்பட்ட அதென்ஸ்க்கும் ஸ்பார்டாவுக்கும் இடையிலான உடன்படிக்கை
(4) பெலொபொனேசியன் போரின் இடைநடுவில் கி.மு 445/446 இல் அதென்ஸ் மற்றும் ஸ்பார்டாவுக்கு இடையிலான உடன்படிக்கை
(5) 10 ஆண்டுகள் நிலவிய பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவந்து அதென்ஸ் மற்றும் மஸிடோனியாவுக்கு இடையில் கி.மு 346 இல் இடம்பெற்ற சமாதான உடன்படிக்கை (......)

**15.** தீப்ஸ் அரசின் அழிவுக்கும் வீழ்ச்சிக்கும் அடிப்படையான அந்த இராச்சியத்தின் செயற்பாடு
(1) மசிடோனியன் ஆதிக்கத்திற்கு சவாலாகக் காணப்படல்
(2) வர்த்தக தேவைகளை விரிவாக்குவதற்கு காட்டிய ஆர்வம்
(3) எபமினொன்ட்ஸ்ஸை இராணுவத்தில் முக்கிய பதவிகளுக்கு நியமித்தல்
(4) லெவுண்ட்ரா போரின் பின்னர் தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்தல்
(5) மன்டினெயாவில் பாரசீகர்களைத் தோற்கடித்தல் (......)

**16.** உரோம மரபுப்படி உரோம் நகரம் ஆரம்பித்தல் நிகழ்ந்தது
(1) கி. மு. 753 இல் (2) கி. மு. 509 இல் (3) கி. மு. 480 இல்
(4) கி. மு. 476 இல் (5) கி. மு. 27 இல் (......)

**17.** ரொமியூலஸ், றெமிஸ் ஆகியோருடன் **தொடர்பற்ற** தெரிவு யாது?
(1) ஈனியாஸ்களின் வழித்தோன்றல்களாவர்.
(2) பெண் ஓநாயினால் வளர்க்கப்பட்டவர்களாவர்.
(3) உரோமின் ஸ்தாபகர்களாவர்
(4) சியுஸின் புதல்வர்களாவர்
(5) செவ்வாய் இன் புதல்வர்களாவர். (......)

**18.** புராதன உரோமின் ஆரம்ப சமூக பிரிவைக் குறிப்பிடுவது
(1) பற்றீஷியன்ஸ், பிளேபியன்ஸ்
(2) உரோமர்கள், வெளிநாட்டவர்கள்
(3) குடிமக்கள், அடிமைகள்
(4) ஏழை, பணக்காரன்
(5) சனநாயகவாதிகள், றிப்பப்ளிகன்மார் (......)

000760

0106000188110760

Past Papers Wiki



**19.** பின்வருவனவற்றுள் பன்னிரண்டு ஒழுங்கு (Twelve Table) அட்டவணைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் கூற்று எது?
(1) பலம் வாய்ந்த உரோம இராணுவத்தைத் தாபித்தல்
(2) உரோம குடியுரிமை பற்றிய முறைமை ஒன்றை உருவாக்குதல்
(3) உரோம சட்டத்தை எழுத்துருவாக்கம் செய்தல்
(4) உரோம நாணயமுறையொன்றை அறிமுகம் செய்தல்
(5) கீழைத்தேயங்களுடன் உரோம வர்த்தகம் ஆரம்பிக்கப்படல் (......)

**20.** உரோம இராச்சியத்தின் பின்னர் தாபிக்கப்பட்ட அரசியல் முறை
(1) உரோம பேரரசு (2) உரோம குடியரசு
(3) பைசாந்தியானு பேரரசு (4) உரோம சம்மேளனம்
(5) உரோம சர்வாதிகாரமுறை (......)

**21.** பின்வருவனவற்றுள் உரோம குடியரசின் வீழ்ச்சிக்குக் காரணமான விடயம் **அல்லாதது** எது?
(1) அரசியல் உறுதித்தன்மையின்மையும் சிவில் யுத்தங்களும்
(2) பொருளாதார சமத்துவமின்மையும் சமூக அமைதியின்மையும்
(3) பலம்வாய்ந்த இராணுவத் தலைவர்களின் எழுச்சி
(4) எல்லைகள் மற்றும் வளங்கள் விரிவாக்கம் பெறுதல்
(5) வகுப்பு சமத்துவமின்மையும் பொது அதிருப்தியும் (......)

**22.** பின்வருவனவற்றுள் உரோம பிரயடரின் வகிபாகத்தைக் குறிப்பிடும் விடை எது?
(1) இராணுவத் தலைவன்
(2) பிரதான மதகுரு
(3) சட்டம் நடைமுறைப்படுத்துபவரும் நீதியை நிலைநாட்டுபவரும்
(4) செனட் சபையின் தலைவர்
(5) அசெம்பிளியின் தலைவர் (......)

**23.** சமூக யுத்தத்தின்போது இத்தாலி கூட்டணியின் முக்கிய வேண்டுகோள் யாது?
(1) தாமே ஆட்சியாளர்களாக புதிய இராச்சியத்தைத் தாபித்தல்
(2) உரோம பிரஜாவுரிமையும் அரசியல் உரிமையும் பெறுதல்
(3) உரோமுக்கு வரி செலுத்துவதிலிருந்து விடுதலை பெறுதல்
(4) தமக்கே உரிய கொன்சியூலர்மாரைத் தெரிவுசெய்ய அனுமதி பெறுதல்
(5) அவர்களின் பாதுகாப்புத் தெய்வத்திற்கு தேவாலயமொன்றை அமைத்தல் (......)

**24.** உரோம குடியரசு உரோம பேரரசு ஆகியது பின்வரும் எந்த சம்பவத்தின் பின்னர் ஆகும்?
(1) ஜூலியஸ் சீசரின் கொலை (2) பியூனிக் போர்கள்
(3) அக்டியம் போர் (2) மேரியஸ்ஸின் இராணுவ சீர்திருத்தங்கள்
(5) மார்க் அந்தோனியின் மரணம் (......)

**25.** பக்ஸ் ரோமானா (Pax Romana) என்பதின் வரைவிலக்கணம் யாது?
(1) உரோமில் அதிகளவில் சிவில் யுத்தங்கள் நிகழ்ந்த காலப்பகுதி
(2) உரோம சாம்ராஜ்யத்தில் அமைதியும் செழிப்பும் நிலவிய காலப்பகுதி
(3) உரோம் தொடர்ச்சியாக இராணுவத் தோல்விகளை அனுபவித்த காலப்பகுதி
(4) கோல் நாட்டுக்கு உரோம் விரிவாக்கம் பெற்ற காலப்பகுதி
(5) உரோம் இராணுவ ரீதியாக பரவிய காலம் (......)

**26.** உரோம எல்லையைப் பெரிதும் விரிவடையச் செய்த ஜூலியஸ் சீசரினால் நடத்தப்பட்ட போரின் பெயரைக் குறிப்பிடுவது எது?
(1) பியூனிக் போர்கள் (2) மித்திரிடாடிக் போர்கள் (3) சமூகப் போர்கள்
(4) மஸிடோனியன் போர்கள் (5) கலிக் போர்கள். (......)

**27.** பேரரசின் விரிவாக்கத்துக்கு உரோம இராணுவத்தின் வகிபாகத்தை மிக நன்றாக விவரிக்கும் தெரிவு எது.
(1) எல்லைப் பகுதியின் பயனை பெற்றுக்கொள்ள இராஜதந்திர ரீதியில் நம்பிக்கையினைக் கொண்ட மிகவும் செயற்திறனற்ற படையாகும்.
(2) ஒழுக்கம் ஒழுங்கமைப்பில் பிரசித்தி பெற்ற எல்லைப் பகுதியினை விரிவடையச் செய்யும் முக்கியமான சாதனமாகும்.
(3) அரசின் உள்ளக ஒழுங்கமைப்பை (Internal order) பராமரிப்பதற்கான சாதனம்.
(4) கைப்பற்றப்பட்ட பிரதேசத்திலுள்ளவர்களை கொண்டு உருவாக்கப்பட்ட இராணுவமாகும்.
(5) தரைப்படையினரைக் கொண்ட இராணுவமாகும். (......)

[13 වැනි පිටුව බලන්න/பக். 13 ஐப் பார்க்க/See page thirteen

0001201

PAST PAPERS WIKI

**28.** பின்வருவனவற்றுள் உரோம இராணுவ வரலாற்றுக்கு மேரியஸ் வழங்கிய அடிப்படைப் பங்களிப்பை மிக நன்றாக விவரிக்கும் தெரிவு எது?
(1) போர்களுக்கு யானைகளைப் பயன்படுத்துவதை அறிமுகம் செய்தமை
(2) புதிய சுற்றிவளைப்பு போர்நுட்பமுறைகளை விருத்தி செய்தமை
(3) உரோம இராணுவத்தை வாண்மை மிகு நிலையான இராணுவமாக சீர்திருத்தம் செய்தமை
(4) பியூனிக் போர்களில் உரோம இராணுவம் வெற்றியடைய வழிப்படுத்தியமை
(5) உரோம இராணுவத்தை புனரமைக்க சல்லாவுக்கு உதவியமை (……)

**29.** பின்வருவனவற்றுள் முதலாவது ட்ரயம்விரேட்டை விவரிக்கும் தெரிவு எது?
(1) சீசர், பொம்பே கிறசஸ் ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட முறையற்ற அரசியல் கூட்டணி
(2) உரோம செனேட் சபையினால் தாபிக்கப்பட்ட முறைசார் அரசியல் கூட்டணி
(3) சீசர் பொம்பே கிறசஸ் ஆகியோரால் வழிப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை
(4) உரோம அரசினால் அனுசரணை வழங்கப்பட்ட தொடர்ச்சியான பொதுச் செயற்திட்டங்கள்
(5) கார்த்தேஜினியனுக்கு எதிராக நடத்தப்பட்ட போர்கள் (……)

**30.** அகஸ்தஸ்ஸின் கீழ் உரோம அரசின் முக்கிய பண்பாக **அமையாதது** எது?
(1) செனற்சபை குறிப்பிடத்தக்க அளவு அதிகாரத்தை வைத்திருந்தமை
(2) சக்கரவர்த்தி உச்ச அளவிலான அதிகார பலத்தினைக் கொண்டிருந்தமை
(3) அனுசரணை மற்றும் பக்கசார்பு என்பனவற்றை விருத்தியாக்கும் முறைமை நிலவியமை
(4) தேர்தல்கள் ஒழுங்குமுறையாக நடத்தப்பட்டமை
(5) பொதுப் பணிகள் கட்டிட செயற்பாடுகள் விருத்தியாக்கப்பட்டமை (……)

## பகுதி II - கிரேக்க உரோம இலக்கியம்

● சுருக்கமான விடை தருக.

**31.** ஹிசியட்டின் **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்** (Works and Days) ஆக்கத்துக்கு ஏற்ப,

(i) மனித இனத்திற்கு விநாசம் ஏற்படுத்துவதற்கு சியுஸ்ஸின் அறிவுரைப்படி கடவுளால் உருவாக்கப்பட்ட 'ஆழமானதும் முழுமையானதுமான பொறி' என்பதற்கு வழங்கப்பட்ட பெயர் யாது?

..........................................................................................

(ii) அது அத்தகைய பெயரால் ஏன் அழைக்கப்பட்டது?

..........................................................................................

**32.** ஹிசியட்டின் **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்ஸுக்கு** (Works and Days) ஆக்கத்துக்கேற்ப கடவுள்மார் உருவாக்கிய 'முழுமையான பொறி' அனுப்பப்படுவதற்கு முன்னர் மனித இனம் பூமியில் மூன்று ஆபத்துகள் இல்லாது வாழ்ந்தது. அவற்றுள் குறைந்தது **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**33.** ஹிசியட்டின் **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்** (Works and Days) ஆக்கத்திற்கு ஏற்ப இரும்புயுகத்து மனிதர்களிடையே நீதியும் தர்மமும் இல்லாதிருந்ததை வெளிப்படுத்த கவிஞரால் பயன்படுத்தப்பட்ட உவமானக் கதை யாது?

..........................................................................................

..........................................................................................

**34.** ஹிசியட்டின் **வேர்க்ஸ் அன்ட் டேய்ஸ்** (Works and Days) ஆக்கத்தில் மனிதர் செல்வந்தர் ஆவதற்கு விதிக்கப்பட்ட முறை யாது?

..........................................................................................

..........................................................................................

**35.** அரிஸ்டோபெனிஸ் இன் **வாஸ்ப்** (Wasps) நாடகத்தில் புரோக்லியானை வீட்டில் சிறைவைக்கும் பணி ஒப்படைக்கப்பட்ட **இரண்டு** அடிமைகளின் பெயரினைத் தருக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**36.** அரிஸ்டோபெனிஸ்ஸின் **வாஸ்ப்** (Wasps) நாடகத்தில்,

(i) புரோக்லியான் பெருமளவில் எந்த இடத்திற்கு செல்ல விரும்பினார்?

..........................................................................................................

(ii) புரோக்லியானை அழைத்துக்கொண்டு செல்ல வந்தவர் யார்?

..........................................................................................................

**37.** அரிஸ்டோபெனிஸ்ஸின் **வாஸ்ப்** (Wasps) நாடகத்துக்கு ஏற்ப புரோக்லியான் அவன் விரும்பிய இடத்துக்கு எந்த நோக்கங்களுக்காக செல்வதற்கு முயற்சித்தார்?

..........................................................................................................

..........................................................................................................

**38.** அரிஸ்டோபெனிஸ்ஸின் **வாஸ்ப்** (Wasps) நாடகத்தில் புரோக்லியான் போலி நீதிமன்ற வழக்கு விசாரணை செய்த முடிவில் அவரை (புரோக்லியான்) மிகவும் துயரத்துக்குள்ளாக்கிய செயற்பாடு யாது?

..........................................................................................................

..........................................................................................................

**39.** சொபொக்கிளிஸ்ஸின் **பிலோக்டிடிஸ்** (Philoctetes) நாடகத்திற்கு ஏற்ப ஒருதடவை லெம்னொஸ்கியில் காயத்துடன் கைவிட்டுச் சென்ற பிலோக்டிடிஸ்ஸை தேடி கிரேக்கர்கள் மீண்டும் அங்கு வருவதற்கு ஏற்பட்ட காரணம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

**40.** சொபொக்கிளிஸ்ஸின் **பிலோக்டிடிஸ்** (Philoctetes) நாடகத்தில் ஓடிசியஸ்ஸுக்கு ஏற்ப பிலோக்டிடிஸ் மீது சந்தேகம் ஏற்படாத முறையில் அவரிடம் நெருங்குவதற்கு மிகப் பொருத்தமான கிரேக்கர் நெயொப்டொலமஸ் என்பதற்கான காரணம் யாது?

..........................................................................................................

..........................................................................................................

**41.** யூரிபிடிஸ்ஸின் **அல்சேஸ்டிஸ்** (Alcestis) நாடகத்தின் அறிமுகத்தில் காட்டப்பட்டுள்ளதன்படி

(i) அட்மீடஸ்ஸின் அடிமையாக அப்பொலோ கடவுளை அனுப்பியவர் யார்?

..........................................................................................................

(ii) அவர் எந்தக் குற்றத்துக்கான தண்டனையாக அவ்வாறு அனுப்பப்பட்டார்?

..........................................................................................................

**42.** யூரிபிடிஸ்ஸின் **அல்சேஸ்டிஸ்** (Alcestis) நாடகத்தில் வரும் முக்கிய கருப்பொருள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

[15 වැනි පිටුව බලන්න/பக். 15 ஐப் பார்க்க/See page fifteen

**43.** டெரன்ஸின் **மதர் இன் லோ** (Mother - in - law) நாடகத்தில் வரும் பிலோமினாவின் பெற்றோர்களின் பெயர் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**44.** டெரன்ஸின் **மதர் இன் லோ** (Mother - in - law) நாடகத்திற்கு ஏற்ப

(i) திருமணத்தை சீரமைப்புச் செய்வதற்கான செயன்முறையில் பக்கீஸ்ஸை சந்திக்க வந்த மாமனார் யார்?

..........................................................................................................

(ii) திருமணத்தைச் சீரமைப்பதற்கு அவர் மக்கீஸ்ஸிடம் வேண்டியது யாது?

..........................................................................................................

**45.** அப்பலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோ** (The Voyage of Argo) காவியத்தில் பொசெயிடன் கடவுளின் மகன்மாராக அறிமுகப்படுத்திய ஆர்கோனொட்ஸ்மார்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**46.** அப்பலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோ** (The Voyage of Argo) காவியத்தில் ஆர்கோ கப்பல் லெம்னொஸ்ஸை அணுகியதும்

(i) லெம்னியான் அதிகாரிகளிடம் பணியாளராக அர்கொனொட்மார் யாரை அனுப்பினார்?

..........................................................................................................

(ii) அவருக்கு ஒப்படைக்கப்பட்ட பணி யாது?

..........................................................................................................

**47.** அப்பலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோ** (The Voyage of Argo) காவியத்தில், ஆர்கோநொட்மார் அவர்களின் பயணத்தின் முடிவை நெருங்கும்போது யூபிமிஸ் (Euphemus) கடலில் ஆழத்துக்கு வீசிய மண்கட்டியிலிருந்து எழுந்த தீவின் பெயர் என்ன?

..........................................................................................................

**48.** சிசரோவின் **முதுமையடைதல்** (On Old Age) ஆக்கத்தில் (முதுமையடைதல் பற்றிய நான்கு குற்றச் சாட்டுகளைக் குறிப்பிடுவதற்கு முன்னர்) சீசரோ குறிப்பிட்ட மிக முதுமையடைந்த (90 அல்லது 100 வயது) காலத்திலும் சுறு சுறுப்புடன் செயற்பட்டு புலமைப்பரிசிலுக்குப் பங்களிப்புச் செய்த கிரேக்க தத்துவவியலாளர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**49.** சிசரோவின் **முதுமையடைதல்** (On Old Age) ஆக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எழுபது ஆண்டுகள் வாழ்ந்த என்னியஸ் தாங்கிக் கொள்ள வேண்டி நேரிட்ட **இரண்டு** பாரிய வாழ்க்கைச் சுமைகள் யாவை?.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**50.** சிசரோவின் **முதுமையடைதல்** (On Old Age) ஆக்கத்தில்

(i) 'இறப்புக்கு மிக நெருங்கிய விடயம்' யாது?

..........................................................................................................

(ii) இந்த நிலைமையில் மனித ஆத்மா எவ்வாறு நடந்து கொள்கிறது?

..........................................................................................................

* * *

[16 වැනි පිටුව බලන්න/பக். 16 ஐப் பார்க்க/See page sixteen

(48) - கிரேக்க, உரோம நாகரிகம் II                                மூன்று மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள் :**

※ தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய **ஆறு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

※ **முதலாம், ஆறாம் வினாக்கள் கட்டாயமானவை.** அவற்றுக்கு மேலதிகமாக, பகுதி **I** இன் பிரிவு **A** இலிருந்து **ஒரு** வினாவையும் பிரிவு **B** இலிருந்து **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து **இரு** வினாக்களையும் தெரிவுசெய்து, வேறு **நான்கு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ **எல்லா** வினாக்களுக்கும் ஏதேனும் **ஒரு மொழியில்** மாத்திரம் விடை எழுதுக.

000760

## பகுதி I - கிரேக்க, உரோம வரலாறு

**1.** பின்வரும் தலைப்புகளில் **ஐந்தினைத்** தெரிவுசெய்து, ஒவ்வொன்று பற்றியும் குறைந்தது **நான்கு** விடயங்களேனும் உள்ளடங்கும் விதத்தில் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கிளெருகி
(ii) திமோகிறஸி
(iii) தெஸ்மொதெடாயி
(iv) அம்பி பொலிஸ் யுத்தம் (கி.மு. 422)
(v) ரிமோலியொன்
(vi) கொமிடியா கென்டுரியாடா
(vii) இலத்தீன் யுத்தம் கி.மு. (340 - 338)
(viii) ஹஸ்ட்ரபால்
(ix) சாமா யுத்தம் (கி.மு. 202)
(x) செம்புறோனியன் சட்டங்கள்

(04 × 5 = 20 புள்ளிகள்)

### பிரிவு A - கிரேக்க வரலாறு

**2.** (i) மெஸேனியன் போர்கள் ஏற்படுவதற்கு காரணமான அடிப்படை விடயங்கள் யாவை? (03 புள்ளிகள்)

(ii) ஸ்பார்டன் ஆக்கிரமிப்பை மெஸேனியன்மார் எதிர்த்த முறையினை சுருக்கமாக குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) 'மெஸேனியன் போர்கள் ஸ்பார்ட்டன் மற்றும் மெஸேனியன் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.' இக்கூற்றினைக் கருத்தில் கொண்டு முதலாம், இரண்டாம் மெஸேனியன் போர்களின் விளைவுகளை கலந்துரையாடுக. (07 புள்ளிகள்)

**3.** (i) அதென்ஸ் நகரத்தை மாபெரும் சக்திமிக்கதாக்குவதில் தெமிஸ்ரோக்லிஸியின் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) ஸ்பார்டன் தளபதியான பௌசானியஸ்ஸுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளின் இயல்பினைச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) டீலியன் லீக் இன் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட முறையில் கவனம் செலுத்தி அது தாபிக்கப்பட்டதிற்குக் காரணமான நிலைமைகளைப் பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

### பிரிவு B - உரோம வரலாறு

**4.** (i) மித்திரிடேட்ஸ் என்பவர் யார்? அவர் முதலாவது மித்திரிடேட்டிக் போரை எவ்வாறு ஏற்படுத்தினார்? (03 புள்ளிகள்)

(ii) டார்டனொஸ் உடன்படிக்கை வீழ்ச்சியடைந்தமைக்கான விடயங்களையும் இரண்டாம் மித்திரிடேடிக் போரில் உரோம் பிரதிபலிப்பைக் காட்டிய முறையினையும் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) 'மித்திரிடேடிக் போர் உரோம வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்' நீங்கள் இந்தக் கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீர்களா? உங்கள் விடையை நியாயப்படுத்துக. (07 புள்ளிகள்)

01020000188110760

[4 වැනි පිටුව බලන්න/பக். 4 ஐப் பார்க்க/See page four

5. (i) சுல்வா, மேரியஸ் என்போர் யார்? (03 புள்ளிகள்)

(ii) உரோம குடியரசு வீழ்ச்சியடைந்தமைக்குக் காரணமான உள்நாட்டு யுத்தங்களை சுருக்கமாக ஆராய்க. (05 புள்ளிகள்)

(iii) ஒகஸ்தஸ் சீசர் உரோமுக்கு அமைதியைக் கொண்டு வந்த முறையினை பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

## பகுதி II - கிரேக்க, உரோம இலக்கியம்

6. **ஆங்கில வினாப்பத்திரத்தில் 6 (a) தொடக்கம் 6 (g) வரையிலான** பாடப் பெயர்ப்புகளிலிருந்து எவையேனும் **ஐந்தினைத்** தெரிவுசெய்து, அவற்றின் சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டு, அவற்றின் உள்ளடக்கங்கள் பற்றிக் கருத்துரை வழங்குக. ($04 \times 5 = 20$ புள்ளிகள்)

7. (i) சொபொக்கிளீஸின் **பிலொக்டிடிஸ்** இல்

(அ) பிலொக்டிடிஸ்ஸ"க்கு பாழடைந்த தீவான லெம்னொஸ்ஸில் வாழ்வதற்கு எது உதவி செய்தது?

(ஆ) அது எந்த முறையில்? (03 புள்ளிகள்)

(ii) நெயொப்டொலமஸ்ஸை அவரது வஞ்சனைச் சூழ்ச்சியின் உதவியாளராகுவதற்கு ஒடிசியஸ் எவ்வாறு தூண்டினார் என்பதைச் சுருக்கமாகப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

(iii) "**ஸொபொக்கிளிஸ்** அவரது அனைத்துக் கதாபாத்திரங்களையும் மையக்கருத்தையும் பயன்படுத்தி நாடகத்தின் முக்கிய பாத்திரங்களின் உடல், மனம் என்பவற்றின் துன்பத்தை வெளிப்படுத்தி அவரது நன்கு திட்டமிட்ட தீர்வினை முன்வைத்து செயற்பட்டுள்ளார்." இக் கூற்றினை ஏற்றுக் கொள்கிறீர்களா? நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு உங்கள் விடையை நியாயப்படுத்துக. (07 புள்ளிகள்)

8. (i) டெரன்ஸின் **மதர் இன் லோ** (Mother- in- law) நாடகத்தின் கதைக் கருவைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) டெரன்ஸின் **மதர் இன் லோ** (Mother- in- law) கதைக் கருவை வளர்த்துச் செல்ல உதவும் விதத்தில் பிள்ளைகளின் பிறப்பின் பின்னர் நாடக கேலிப் பேச்சுகளும் ஆர்வமும் அதிகரிக்கத் தொடங்கும் முறையினை மிகச் சுருக்கமாக விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) "டெரன்சின் **மதர் இன் லோ** (Mother- in- law) களிப்பூட்டுவதும் நகைச்சுவையானதுமான நாடகமாக இருப்பதுடன் அங்கு பெண்கள் ஒரே தன்மையானவர்களாய் கதைக்கருவை வளர்ப்பதற்கு முக்கிய பங்களிப்பாளர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்." இக் கூற்றின் உண்மைத் தன்மையை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

9. (i) அப்பொலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோவில்** (The Voyage of Argo) ஜேசனிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்கு ஆர்கோவின் சிரேஷ்ட குழுவுடன் இணைந்த **மூன்று** வீரர்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) அப்பொலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோவில்** (The Voyage of Argo) ஜேசன் மற்றும் மிடேயாவுக்கு இடையிலான தொடர்பையும் அது ஆர்கோநொட்ஸ்களின் பயணத்தில் செலுத்திய தாக்கத்தையும் சுருக்கமாகப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

(iii) அப்பொலோனியஸ்ஸின் **த வொயேஜ் ஒவ் ஆர்கோவில்** (The Voyage of Argo) ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்கு ஆர்கொனொட்ஸ்மாரை வீரர்களின் சமூகமாக முன்வைக்கும் முறையினை அந்த ஆக்கத்தினைக் கொண்டு விளக்குக. (07 புள்ளிகள்)

* * *

[5 වැනි පිටුව බලන්න / பக். 5 ஐப் பார்க்க / See page five